பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 07 2026 SATURDAY 6 30 PM

<u>வணக்கம்-மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) நாட்டின் மின்னணு கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், நுகர்வோருக்கான நீதியை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளில், அனைத்து தரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியுள்ளதாக இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3) 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோலை பயன்படுத்தவதால் வாகனங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று இந்திய எண்ணெய்க் கழகத்தின் முன்னாள் துணைப் பொது மேலாளர் திரு. கேசவன் கூறியுள்ளார்.

4) நீலகிரி, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) இலங்கைக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>>>>><<<<<<<

நாட்டின் மின்னணு கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களால் நுகர்வோருக்கு நீதி கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நுகர்வோர் நீதி தொடர்பாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி எழுதிய கட்டுரையை தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்து கொண்டுள்ள பிரதமர், நுகர்வோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், மின்னணு கட்டமைப்பில் மத்திய அரசு மாற்றங்களை கொண்டு வந்ததாக தெரிவித்துள்ளார்.

அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள E-Jagriti இணையதளம் நுகர்வோருக்கான நவீன நீதி கட்டமைப்பை உருவாக்கித் தந்துள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

நுகர்வோருக்கு விரைந்து நீதி கிடைப்பது, வெளிப்படைத்தன்மை ஆகியவை மின்னணு தொழில்நுட்பத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் காணொலி விசாரணை உள்ளிட்டவை விரைந்து நீதி கிடைக்க துணைபுரிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோருக்கு நீதி கிடைப்பதில் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் நேரத்தில், பொறுப்பான வர்த்தக நடவடிக்கைகளை உறுதி செய்ய E-Jagriti இணையதளம் உதவிடும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த 12 ஆண்டுகளில், கிராமப்புற மற்றும் ஏழை எளிய நடுத்தர குடும்பங்களை சேர்ந்த மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சேலத்தில் இன்று பிஜேபி நிர்வாகிகளிடையே உரையாற்றிய அவர், கஷ்மீரில் 370வது அரசியல் சட்டப்பிரிவை நீக்க வேண்டும் என்று போராடி உயிர்த்தியாகம் செய்த டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி குறித்த பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

பிஜேபி தனது தேர்தல் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கஷ்மீரில் அரசியல் சட்டத்தின் 370-வது பிரிவு நீக்கம், அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது போன்ற கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது, மாநில அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்தும், புதிய திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியும் பேசிய அவர், மக்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அதற்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பின்னர், மண்டகாபாளையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர் வாகனங்களை அவர் வழங்கினார்.

விவசாயிகளுக்கான மாநில அரசின் நலத் திட்ட உதவிகளையும் திரு. அருண்ராஜ் எடுத்துரைத்தார்.

>>>>>>><<<<<<<

பொங்கல் பண்டிகையின் போது, தகுதியுடைய அனைவருக்கும் இலவச வேட்டி சேலைகள் வழங்கப்படும் என்று மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம், காட்பாடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலவச வேட்டி சேலை வழங்குவதற்கான கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில், மாநில அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டத்தில், சாலைப் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு. விஜய் பாலாஜி கூறினார்.

>>>>>>><<<<<<<

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மற்றும் அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் இன்று தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கரை சந்தித்து மனு அளித்தனர்.

தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராக, எவ்வித பொறுப்பும் இல்லாத இரண்டு தனிநபர்கள் கலந்து கொண்டது குறித்தும், மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்ற சிறுமிகளிடம் மாநில அமைச்சர் திரு. விஸ்வநாதன் முறையற்ற விதத்தில் நடந்து கொண்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்தும் விசாரணை நடத்த உத்தரவிடுமாறு அந்த மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாக திரு. நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மாநில நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை, சட்டத்தின் ஆட்சி, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் நம்பிக்கை ஆகியவற்றை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

*20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோலை பயன்படுத்தவதால் வாகனங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று இந்திய எண்ணெய்க் கழகத்தின் முன்னாள் துணைப் பொது மேலாளர் திரு. கேசவன் கூறியுள்ளார்.*

*சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*இந்தப் பெட்ரோல் பயன்பாடு குறித்து சமூகவலைதளங்களில் பரப்பப்படும் தவறான தகவல்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*இந்த பெட்ரோல் பயன்பாட்டின் காரணமாக அந்நிய செலாவணி சேமிப்பு கிடைப்பதோடு, சுற்றுச் சூழல் பாதிப்பிற்கும் உதவிடும் என்றும் திரு. கேசவன் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - கேசவன் 47 செகண்ட்ஸ்)*

>>>>>>><<<<<<<

*நீலகிரி, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.*

*(Sound Byte -வி ஆர் துரை - 50 Sec.)*

>>>>>>><<<<<<<

*மாவட்டச் செய்திகள்*

*கடலூரில் இளைஞர் விளையாட்டு அரங்கத்தினை மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார் இன்று திறந்து வைத்தார்.*

>>>>>>><<<<<<<

*விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அருகே, 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடம் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்புகளை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. அரவிந்த் தர்மாதிகாரி திறந்து வைத்தார்.*

>>>>>>><<<<<<<

*தூத்துக்குடி மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் இரண்டாவது சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் பணிகளை ஆட்சியர் திரு. விஷ்ணு மஹாராஜன் இன்று ஆய்வு செய்தார்.*

>>>>>>><<<<<<<

*கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே உள்ள துணை மின்நிலைய பணியாளர்களுக்கு, வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வது குறித்த பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.*

*>>>>>>><<<<<<<*

*தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று திருப்பத்தூரில் நடைபெற்றது.*

*>>>>>>><<<<<<<*

*செங்கல்பட்டு அருகே நீதிமன்ற உத்தரவின்படி, 500 கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் தீயிட்டு அழித்தனர்.*

*>>>>>>><<<<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*இலங்கைக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*ஹம்பன்தோட்டாவில் இன்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிறகு 320 ரன் எடுத்தது.*

*321 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 49 புள்ளி 2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 324 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*>>>>>>><<<<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஜப்பானின் Hiroko Kuwata இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>>>END<<<<<<<*